மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII. Madras: September 1911. No - 9.

புத்தகம் - கரு. சென்னப்பட்டணம்: செப்டம்பர்மீ 1911. இலக்கம்-9.

அரச சக்ரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ்.

[Copy-right Reserved.]

(234 - வது பக்கத் தொடர்ச்சி).

இவ்விரு ராஜகுமாரர்களும் டக்காண்டி என்ற கப்பலில் வேலைசெய்தார்கள். இதற்கு லார்ட் சார்லஸ் ஸ்காட் கப்பற்றலைவர். இங்கு வேலை செய்பவர்களுடைன் சேர்ந்து சிநேக பான்மையோடு ஒத்துழைத்து வந்ததுமன்றி சாதாரண கட்டிலில் படுத்து நித்திரைசெய்து வந்தார்கள். இக்கப்பல் மேடிடரேனியன் கடல்மார்க்கமாகச் சென்றது. இப்பிரயாணத்தில் ஜார்ஜ் அரசருக்கு மிக்க சந்தோஷமுண்டானது. இவ்வித பிரயாணத்தைச் சுருக்கமாக விவரித்து அப்போதைக்கப்போது தமது பெற்றோர்களுக்கு கடிதம் எழுதி வந்தாராம்.

1880-ம் வருஷம் உலகத்தைச் சுற்றி இக்கப்பல் மற்ற நான்கு கப்பல்களுடன் பிரயாணம்சென்றது. அக்காலத்தில் ஜார்ஜ் தினசரிக்குறிப்பு புஸ்தகமொன்று வைத்துக்கொண்டு, அதில் தாம் கண்ட தேசங்களையும், அத்தேசத்து ஜனங்களின் நடவடிக்கை முதலியவைகளையும் குறித்து வந்தாராம். இவ்விதம் செய்த பிரயாணத்தால் இக்குமாரர்களுக்கு உலகஞானமுண்டானது. பின்னிட்டு லௌசானில் கானடா கப்பலில் 1883-ம் வருஷம் சேர்ந்து பழகி வந்தார். வட அமேரிக்கா, டாரன்டோ, கானடாவிலுள்ள சில பாகங்கள் முதலியவைகளைப் பார்வையிட்டார். அங்குள்ள விசேஷமாக பேர் பெற்ற நயகார என்ற நீர் விழ்ச்சியைக் கண்டு ஆநந்தங்கொண்டார். இதன் மேல் கொண்ட பிரியம் கனடா ராஜ்யத்திலும் விழுந்து அவ்விராஜ்யத்தாருடன் சிநேகம் செய்துகொள்ள ஏதுவாயிற்று. அவ்வித சிநேகம் விருத்தியடைந்து வந்திருக்கிறதாம்.

1884-ம் வருஷம் ஜுன் மாதம் கப்பலோட்டும் பரிக்ஷையில் முதலில் தேறினர். இதற்குத் தகுந்தபடி கப்பலில் தலைவராகயிருந்தவும் 90 வயதுள்ளவுமான அட்மிரல் சர் ஜான் டால்ரிம்பல் ஹே என்பவர் "ஜார்ஜ் கப்பலோட்டும் வேலையில் சிறந்தவர். சாதாரண வேலைக்காரரல்ல; நம்மைப்போலவே கஷ்டப்பட்டு எல்லா வேலைகளையும் செய்துதெரிந்து கொண்டவர்" என்று எழுதியிருக்கிறார்.

இப்படி பரிக்ஷையிற் தேறி நற்பேறடைந்தபின் க்ரீன்விச்சிலுள்ள ராயல்நேவல் காலேஜியில் சேர்ந்து படித்து வந்தார். இவர் இங்கு படிக்கும் பொழுது இவருக்கு இரண்டு அறைகள் மாத்திரம் கொடுக்கப்பட்டன. இவ்வறைகளில் தமது பந்துக்களுடைய உருவப்படங்களை மாட்டி அழகாக வைத்திருந்தார். 1885-ம்வருஷம் மூன்று கப்பல்களில் பெரியகப்பல் உத்தியோகஸ்தருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார் மூன்றாவதாகிய அலக்சாண்ட்ரா என்றது இவருடைய சிற்றப்பனுடைய கொடி கப்பல். ஜார்ஜ் கப்பலோட்டும் தொழிலில் விசேஷ தேர்ச்சியைப் பெறவேண்டுமென்று இவர் சிற்றப்பன் மிக்க விரும்பியிருந்தார்.

1889-ம் வருஷத்தில் ஒரு டார்பிடோ படகை நடத்தியபொழுது இவர் எடுத்த காரியத்தை முடிக்கவேண்டுமென்பதைக்குறித்து ஒருகதை சொல்லப்படுகிறது. ஜார்ஜ் அரசருடைய தலைவர் (Sir Edmund Commerell) சர் எட்மண்ட் கம்மரல்லுக்கு 7-வது எட்வர்ட் இளவரசராயிருந்தபொழுது தமது குமாரனைப்பார்க்க தமக்கு விருப்பமாயிருக்கிறபடியால் தயவுசெய்து ஜார்ஜை யனுப்பும்படி ஒருகடிதம் எழுதினார்.

ஜார்ஜுக்கு இச்சங்கதி தெரிந்தவுடன், "ஐயா, எனது டார்பிடோ படகின் கதி என்னவாகும் ?" என பதிலளித்தாராம். சர் எட்மண்ட் "ஒருநாள் தானே, போய் வரலாமென்னவே" அது முடியாது ஐயா, கடலில் இதை நடத்த தங்கள் உத்திரவு பிறந்திருக்கிறதே. நான் போகவேண்டியது தான்" என்று சொல்லி ஸ்பிட் ஹெட்டுக்கு இப்படகை வெகு ஜாக்கிறதையுடன் நடத்தினாராம்.

இவர் இவ்விதம் இத்தொழிலை யாவரும் மெச்சும்படி செய்து வரும் காலத்தில் நானாதேசத்து தபால் தலைகளைச் சேகரிப்பதில் மிக்க பிரியமுடையவராயிருந்து அநேகவிதம் விதமான தலைகளைச் சேர்த்து வைத்தாராம். அவரது பாலியப்பருவமுதல் இவ்விதம் செய்வதில் இவருக்கு இஷ்டமாம். லண்டன்மா நகரில் விடுமுறை காலத்தில் ஜார்ஜ் அரசரிருந்த பொழுது இன்னும் புதிய ஸ்டாம்புகளைச் சேர்ப்பதில் இவரது ஊக்கத்தைக் காண்பிக்கும் ஒரு கதை யுண்டு. ஒரு ஆபீஸில் ஒருவர் தாம் சேர்த்து வைத்திருந்த ஸ்டாம்புகளை விற்க தமக்கு விருப்பமிருப்பதாகவும் அவைகளைத் தமது கிரகத்தில் எந்த சனிக்கிழமையிலாவது தேவையானவர் 2-மணிக்குமேல் நேரே வந்து பார்க்கலாமென்றும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். ஜார்ஜ் அரசர் அந்த விளம்பரத்தைக் கண்ட தக்ஷணமே சனிக்கிழமை வந்ததும் புறப்பட்டு அக்குமஸ்தா வீட்டிற்குப்போனார். இவர் போனதும், அந்தவீட்டு எஜமானி குமாஸ்தாவினிடத்திற்குச்சென்று "ஐயா, யாரோ ஒரு வாலிபன் தங்களைக் காண காத்திருக்கிறான்" என்றாள். அக்குமாஸ்தா வந்திருந்த வாலிபனைக் கண்டு சங்கதியை யறிந்துகொண்டு தம்மிடத்திலிருந்த விதம் விதமான தபால்தலைகளைக் காண்பித்தார். ஜார்ஜ் அரசர் சாதாரண வாலிபனைப்போலிருந்து தமக்கு வேண்டிய சில அபூர்வமான ஸ்டாம்புகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு அவ்வீட்டை விட்டுத் திரும்பிப்போகையில் அக்குமாஸ்தா ஜார்ஜ் அரசர் தான் வந்தாரென்பதை அறிந்துகொண்டாராம்.

1885-ம் வருஷம் அக்டோபர்மீ த்ரஷ் என்ற பீரங்கிப்படகை நடத்துவதில் பழகினார். இவர் அச்சமயங்களில் கடலில்சென்று செய்த மாலுமி

வேலையைப்பற்றி பகழ்ந்துபேசினர்கள். இவருடைய தகப்பனும் ஜர்மனி சக்ரவர்த்தியும் இவர் படகுககு வந்து இவர் வேலையைப்பார்த்தார்கள். ஜார்ஜும் தாம்முதற் தடவையாக இப்படகை நடத்துவதைத் தமது அருமைத் தாயாருக்கும், சகோதரிகளுக்கும் காண்பிக்க மிகவும் விரும்பினர்.

1887-ம் வருஷத்தில் விக்டோரியா மகாராணியாரின் ஆளுகையின் ஞாபகார்த்தமாக ஜுபிலி வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. வேஸ்ட்பின்ஸ்டர் கோயிலில் நடந்ததெய்வ ஆராதனைக்கும் ஸ்தோத்திரம் செய்வதற்கும் நமது ஜார்ஜ் அரசர் சென்றிருந்தார். இக்கொண்டாட்டம் நடந்த காலத்தில் கப்பல்படை அணிவகுத்தார்கள். இவரும் அதில் சேர்ந்திருந்தார். விக்டோரியா ராணியார் தமது பேரப்பிள்ளை கப்பலில் பயின்று வருவதை ஆமோதித்தார்கள். 1889-ம் வருஷத்தில் தமது சொந்த கப்பல் படைத்தலைவனுக்குத் துணைவனாக ஜார்ஜை நியமித்தார்கள். இவர் வெஸ்ட் இந்தீஸிலிருந்தபொழுது ஜெமைக்கா கைத்தொழில் பொருட்காட்சியைத் திறந்தார்.

1889-ம் வருஷம் ஜுலைமாதத்தில் இவருடைய மூத்த சகோதரி பைப் பிரபுவுக்கு விவாகம்செய்யப்பட்டாள். உடனே தமது சகோதரி தமது குடும்பத்திலிருந்து பிரிந்து தமது கணவருடன் போய்விட்டாள். இவரும், இவருடைய சகோதரிகளும் அதிக நேசமுள்ளவர்களா யிருந்தார்கள். இவ்வித சம்பவம் சிறிது விசனத்தை யுண்டாக்கியதாம்.

1891-ம் வருஷத்தில் ஜார்ஜ் அரசர் தள கர்த்தராக நியமிக்கப்பட்டார். இவர் இவ்வருஷத்தில் ஐயர்லேண்ட் தேசத்தைதமது சகோதரருடன்போய் பார்த்தார். இப்பொழுதுதான் ஜார்ஜ் பிரபுவுக்கு டப்ளினில் கடும் சுரம் கண்டது. விக்டோரியா மகாராணியார் முதலியவர்கள் மிக விசனமுற்றிருந்தார்கள். தெய்வானு கூலத்தால் இவருக்குவந்த சுரம் நீங்கிற்று. இவரும் தமது கப்பற்படை அலுவலைச்செய்ய ஆரம்பித்தார். இவ்வருஷக்கடைசியில் இவருடைய சகோதரருக்கு வியாதிகண்டது. எவ்வளவோ கைத்தேர்ந்த வைத்தியர்கள் சிகிச்சைசெய்தும் பிரயோசனமில்லாமற்போயிற்று. இவர் 1892-ம் வருஷம் ஜனவரி மாதம் 14-ம் தேதியன்று மரணமடைந்தார். அப்பொழுது இவருக்கு வயது 29. 'ப்ரின்ஸெஸ்மே' என்னும் ராஜகுமாரத்திக்கும் இவருக்கும் விவாகம் நிச்சயமாய் முகூர்த்தமும் வைக்கப்பட்டிருந்தது. இவர் திடீரென்று இறந்துபோகவே இராணியாரவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்ததுடன் பிரிடிஷ் ராஜ்யத்தி லுள்ளோரெல்லாரும் பெரும் துயரமடைந்திருந்தார்கள்.

ஜார்ஜ் அரசருடைய மூத்த சகோதரர் ஆல்பர்ட் விக்டர் இறந்தமையால் ஜார்ஜ் அரசர் தமது தகப்பனுருக்குப்பின சிம்மாசனத்திற் குரியவரானர். இவ்வித சம்பவம் உண்டானமையால் ஜார்ஜ் அரசர் தமக்குப்பிரியமான கப்பற்படையைவிட்டு நீங்கி இராஜாங்க விஷயங்களிற்புகுந்து அரிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளும்படி செய்தது.

மேரி ராணியாரின் பால்யப்பருவம்.

மேரி ராணியார் தமக்கு கணவராகப்போகும் ஜார்ஜ் அரசருடைய மாளிகைக்குச் சிறிது மைல் தூரத்தில்தான் தமது பாலியப்பருவத்தில் வய

த்து வந்தார்கள். ஜார்ஜ் அரசர் தமது சகோதரர்களுடனும் சகோதரிகளுடனும் மார்ல்பரோ அரமனையில் வசித்துக்கொண்டுவருகையில், டெக்கின் ப்ரின்ஸஸ் மே அவர்கள் தமது பெற்றோர்களுடனும் மூன்று சகோதரர்களுடனும் கென்சிங்டன் அரமனையில் சிலகாலம் வாசஞ்செய்து வந்தார்கள். பின்பு ரிச்மாண்டிலுள்ள வோயிட் அவுஸில் தமது உறவினர்களாகிய ஜார்ஜ் அரசர் முதலானவர்கள் வசிக்கும் அரமனைக்கு வெகு சமீபத்தில் ப்ரின்ஸஸ்மே முதலானவர்கள் வசித்துவந்தார்கள். இவ்விதம் வசித்துவந்தமையால் இவ்விரு அரச குடும்பத்தார்கள் அடிக்கடி சந்தித்துவந்தார்கள். ஜார்ஜ் அரசருக்கு இவர்கள் மீது அதிக பிரியமிருந்ததென்றே சொல்லலாம்.

1867-ம் வருஷம் மேமீ 26உயன்று ப்ரின்ஸஸ் விக்டோரியா மேரி கென்சிங்டன் அரமனையில் ஜனித்தார்கள். ஒரு மாதமானபின் இக்குழந்தை ஞானஸ்னனம் செய்விக்கப்பட்டது. இப்பெண் மணியை பால்யப்பருவமுதல் ப்ரின்ஸஸ்மே என்று செல்லப்பேராக அழைத்துவந்தார்கள். இப்பெண்மணி தம் தாய்தந்தையர் களுடைய குணங்களை யடைந்து நற்பேர் அடைந்துவந்தாள். மேராணியார் பிரகாசமானமுகத்துடனும் புன்சிரிப்புடன் ஒருவயது குழந்தைப் பருவமுதல் தென்பட்டார்கள். இக்குழந்தையின் தகப்பனர் தமது குழந்தையின் மீது மிக்க அன்புடனு மிருந்ததுடன் மிக்க மகிழ்ந்து ஆனந்த சாகரத்தி மூழ்கியிருந்தார். ஏனெனில் இக்குழந்தை தான் முதலில் இவருக்குப் பிறந்தது. இக்குழந்தைக்கு 15 மாதங்களானவுடன் ஒரு சகோதரன் ஜனித்தான். 1870-ம் வருஷத்தில் பிரின்ஸ் ப்ரான்விஸ் ஜனித்தார். 1874-ம் வருஷத்தில் பிரின்ஸ் அலக்சாண்டர் ஜனித்தார்.

நாம் ப்ரின்ஸஸ்மே என்பதற்குப் பதிலாக மேரிராணி என்றே இனிவழங்குவோம். மேரிராணி யார் பாலியப்பருவத்தில் ஒரு வருக்கும் அடங்கியிருக்க மாட்டார்களாம். ஆனல் சந்தோஷ மாயிருப்பார்களாம். மேலும் மிகவும் எதிலும் பிரியமற்றிருப்பார் களாம். மேரிக்குத் தலைவியாயிருந்து படிப்பு சொல்லிக் கொடுத்தவள் ஒரு பிரஞ்சு மாது. இவள் பெயர் மேடம் ப்ரிக்கா. மேரிராணி தம்மிடத்திலிருந்த அதிகப்பழமையானவும் அழுக்குள்ளவுமானபொம்மைகளை விசுவாசத்துடன் வைத்திருப்பார்கள். சிநேகிதர்களோ பந்துக்களோ அழகுள்ளவும் நேர்த்தியுமான பொம்மைகளை இனமாகக்கொடுத்தபோதிலும் தம்மிடத்தி லுள்ளவைகளை விலக்கிவிடமாட்டார்கள். மேரிராணியாரிடத்தில் ஆட்டுக்கடாக்களைப் பூட்டிய ஒரு வேடிக்கை வண்டியிருந்தது. இதைத் தமது அரமனைத் தோட்டத்தில் சுற்றி வரும்படி விடுவார்கள். அச்சமயத்தில் மேரிராணியாருடைய தகப்பனராவது அல்லதுதலைவியாவது சமீபத்தி லிருப்பார்கள்.

சிற்சில சமயங்களில் மார்ல்பரோஹவுஸில் அல்லது கென்சிங்டன் அரமனையில் குழந்தைகள் கூட்டம் கூடும். பக்கிங்ஹாம் அரமனைக்கு தங்கள் பெற்றோர்களுடன் போய்வருவார்கள். தலைவி அடிக்கடி வினயத்துடன் மேரி ராணியாரைத் தமது பாடங்களைப்படித்து விருத்தியடையும்படி வேண்டிக் கொள்வார்கள். இவ்விஷயத்தில் தலைவி மிகப் பொறுமை யுடனிருந்ததும், மேரியின்தாயார் அடிக்கடி படிக்கும்படி தூண்டிவந்ததும் நன்மையாக முடிந்தது. சரித்திரம் படிப்பதில் மேரிக்கு விருப்பமதிகம். மற்றப் பாடங்களையும் நன்முகப்படித்து வந்தார்களாம். மேரி ராணியார் நல்லகாற்

றுள்ளவிடங்களில் உலாவிவரவும், விளையாடிவரவும் இவரது தாயார் ஏற்பாடு செய்துவந்தார்கள். மேலும் தமது சகோதரர்களுடன் க்ரிகட் என்னும்பந்து ஆட்டத்தை விளையாடி ஜெயம்பெறுவாள். மேரி ராணியாருடைய நல்ல தேகசௌக்யத்திற்கு காரணபூதர்கள் இவர்களது தாயாரும், தலைவி உபாத்தியாயரும் தான். ஏனெனில் படிப்பும், விளையாட்டும் கலந்திருக்கும்படி செய்துவந்தார்கள். தேகப்பயிற்சியையும் கவனித்துவந்தார்கள்.

1882-ம் வருஷம் தமது ஜென்ம ஸ்தானத்தைவிட்டு வேறு தேசத்தில் வசிக்கும்படி நேரிட்டது. அதாவது ஈஜிப்ட்நாட்டு யுத்தப்படையில் சேர்ந்து உதவிபுரிய ராணியாரின் தகப்பனார் தாமே முன்வந்தார். இவருடைய மனைவியும், மேரிராணியும் கூடச்சென்றார்கள். அப்பொழுது மேரி தமது தகப்பனார் யுத்தத்திலிருந்து பிழைத்து சீக்கிரம் திரும்பிவரவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு மிக்க மனக்கவலையுடனிருந்தார்கள். அவர் யுத்தத்திலிருந்து திரும்பிவந்தவுடன் இவர்களடைந்த சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. 1883-ம் வருஷத்தில் மற்றொரு முக்கியமான மாறுதலுண்டானது.இக்குடும்பத்தார்கேன்சிங்டன்அரமனையைவிட்டு சிறிது காலம் மேரி ராணியாருக்கு இத்தாலி, பிரன்சுபாஷைகளில் தாட்டியாய்ப் பேச பழக்கிவைப்பதற்காக பிளாரன்ஸில் தங்கியிருக்கத் தீர்மானம் செய்தார்கள். அவ்விதமே அங்குபோய் வசித்தார்கள். இவ் விராஜகுடும்பத்தைக் காண ப்ரிடிஷ் சிநேகிதர்களும், இதரதேசத்து நண்பர்களும் அடிக்கடி வந்துகொண்டிருந்தார்கள். மேரி ராணியார் தமது பந்துக்களுடன் அவ்வூரிலுள்ள விசித்திரக்காட்சிகளைக் கண்டுகளித்தார்கள். அவ்வூரிலுள்ள பேர்பெற்ற கட்டடம், ஸ்தலம் முதலியவைகளைப்பார்த்து மகிழ்ந்தார்கள். இங்கு சங்கீதம் பிரபலம். இக்குடும்பத்தார் சங்கீதசாலைக்கும் நாடகசாலைக்கும் போய்வருவார்கள். இங்குவசித்து வந்தகாலத்தில் மேரி ராணியார் சாதாரணவெண்மை நிறமுள்ள உடுப்பைத் தரித்துக்கொண்டு தமது பந்துமித்திரர்களுடன் உல்லாசமாகக் காலங்கழித்து வந்தார்கள்.

இங்கிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தபொழுது விக்டோரியா ராணியாரவர்கள் ரிச் மண்டிலுள்ள வொயிட் ஹவுஸில் தங்கியிருக்கும்படி வேண்டிக்கொள்ளவே, மேரி ராணியின் பெற்றோர்கள், சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்டு அவ்விதமே அவ்விடத்தில் வசித்தார்கள். மேரிராணியார் எல்லாரைவிட அதிகமாக இங்கு வசிக்க விரும்பினார்கள். மேரியினுடைய சகோதரர்கள் பாடசாலையில் படித்து வந்தமையால் தங்களது சகோதரியுடன் கூட எப்பொழுதும் வீட்டிலிருக்க முடியவில்லை. மேரிக்கும் அவள் தாயாருக்கும் இங்குள்ள அழகான பூந்தோட்டமும் இதற்குச் சமீபத்திலுள்ள இதர தோட்டங்களும் அதிக மனமகிழ்ச்சியை யுண்டாக்கின. இவ்விடம் மேரிராணியாரின் தாயாருக்குப் பழகின இடம். ஆனால் மேரிராணிக்கு இவ்விடத்திலுள்ள தோட்டம், துறவு, கட்டடம் முதலியவைகள்தெரியாது. அவ்வித யிடங்களையெல்லாம் மேரி குதிரை சவாரிபோய்ப் பார்ப்பாள். இவ்விடத்திலுள்ள ஏழைகளையும், அத்யாவசியமாய் உடுக்க வஸ்திரமும் அன்னமும் தேவையா யுள்ளவர்களையும் போய்ப்பார்த்து தம்மாலியன்ற உதவிபுரிவாள். இவ்வித பரோபகாரம் செய்து வந்தமையால் அங்கு அக்கம் பக்கத்தி லுள்ளவர்களெல்லாம் மேரியைப் புகழ்ந்து வந்தார்கள். மேரியை அன்புடன் நேசித்தும் வந்தார்கள். இங்கிருந்தமையால் விக்டோரியா ராணி

யார் வசிக்கும் அரமனைக்கு அடிக்கடி மேரியும் அவள் தாயாரும் போய்வர நேர்ந்தது. அரசகுடும்பத்தார் இக்குழந்தையின் சௌந்தரியத்தைக் கண்டு மகிழ்வார்கள். மேலும் இப்பெண்மணி இதரதேசங்களில் வசித்து அத்தேசத்தாருடைய நடை, உடை பாவனைகளை யறிந்துகொண்டு, மேரிவிருத்தியடைந்து வந்திருப்பதைக் கண்டு, ஆனந்தங்கொண்டதுடன் மிகவும் பக்ஷமாயிருந்தார்கள்.

மேரி ராணியாருக்கு விவாக வயது ஆரம்பமானது. தங்கள் கிரகத்திலுள்ள கோலம்புனை மண்டபத்தில் (Drawing Room) முதற்தடவையாக நல்ல உடுப்புகளைத் தரித்துக்கொண்டு வந்தார்களாம். ராணியாரின் தாயார் தமது புத்திரி தரித்துக்கொண்ட உடுப்பைக் கண்டு மனமகிழ்ச்சி யடைந்தார்களாம். இதுமாத்திரமா? மேரியின் தகப்பனாரும், சகோதரர்களும் அதிகப்பெருமைபாராட்டாம லிருக்கவில்லை. பாடசாலையிலிருந்த சகோதரர்களில் ஒருவன் "மே, நீ என்ன திடீரென்று பெரியவளாய் விட்டாயே!" என்று ஆச்சரியத்துடன் கேட்டானாம். ஏனெனில், தனது சகோதரி சௌந்தரியமாயும் சித்தசுவாதீனமா யிருப்பதைக் கண்டாராம். இச்சமயத்தில் அந்நியநாட்டு அரசனொருவன் மேரி ராணியாரை மணந்துகொள்ள எண்ணினதாகவும் அப்படியவ்வரசன் எண்ணியவண்ணம் சிறிதும்கவனிக்கப்படவில்லை யென்றும் இரகசியப் பேச்சு உண்டானது.

அடிக்கடி நடக்கும் பொதுக்காரியங்களுக்கு மேரி ராணியாருக்கு ஜனங்கள் அழைப்புப் பத்திரம் அனுப்பிவந்தமையால், அவர்கள் தாயாரும் இடைவிடாது தமது அருமைக் குமாரத்தியுடன் போகவேண்டி யிருந்தது. ஒரு சமயத்தில் ஒரு மண்டபத்தில் ஏதோ ஒரு விசேஷம் நடந்தது. அதற்கு மேரி ராணியாரை வரும்படி கேட்டுக்கொள்ளவே, தாம்வருவதாக வாக்களித்தார்கள். பின்பு காலதாமதமாக அம்மண்டபத்திற்குடபோகவே, தற்செயலாய் பாண்டு வாத்தியம் வாசிப்பவர்கள் "மேரி! எழுந்திரு" என்பதைப் பாடினார்களாம். நமது மேரி ராணியார் இவ்விதம் அகஸ்மாத்தாய் பாடின கீதத்தைக் கேட்டு மலர்ந்த முகத்துடன் புன்னகை கொண்டார்களாம்.

பொதுக்காரியங்களில் மேரி ராணியார் தமது தாயாருடன் வந்திருப்பது தான் ஜனங்களுக்கு ஒருவித மனச்சந்தோஷத்தை யுண்டாக்குமாம். சாதாரண உடுப்புகளை நன்றாக அணிந்துகொண்டு போவார்களே தவிர டாம்பீகமான ஆடைகளைத் தரித்துக் கொள்ளமாட்டார்கள். இவ்வித உடுப்புடன் சந்தோஷமுள்ள ஒரு இங்கிலீஷ் பெண்மணியைப்போல் தென்படுவாள். தம்மிடத்தில் அறிமுகம் செய்யப்பட்டவர்களுடன் சிரித்துக்கொண்டு பேசுவாள். காரியப்பொறுப்பு, மனக்கவலை யொன்றுமில்லாமல் உற்சாகத்துடன் தமது பந்து மித்திரர்களுடன் கூடிக்குலாவிக் கொண்டிருந்த மேரி ராணியார் ரோஜாபுஷ்பத்தைப்போல் காணப்படுகிறாள் எனறு யாவரும் சொல்லி வந்தார்களாம்.

☞ பத்திராதிபர்.

பொய்மை.

பொய்யினேன் "புலையினேன் கொலையினேன் நின்னருள் புலப்பட அறிந்திலேயாப், புன்மையேன்......" என்று தாயுமானவர் சுவாமிகளும்,

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமைவேண்டும்
பெருமை பெருநினது புகழ் பேச வேண்டும் பொய்மை பேசாதிருத்தல் வேண்டும்"

என இராமலிங்க சுவாமிகளும் அருளிச்செய்த போந்தில், பொய்மையானது புலைகொலைகளுக்குச் சமானமான பாதகமென்பதும் அஃது ஈசன் திருவருளுக்குப் பாத்திரமாகாதபடி யெவரையும் அழிக்குந்தகைத் தென்பதும் தொனித்து நிற்பதினை அப்பாடல்களை மனவுருக்கத்துடன் பாடிக்கேட்ட எவர்தான் மறத்தல் கூடும்?

இக்கொடிய பொய்மையானது பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகமதிக்கற்பாலது. இது கேவலம் உண்மையல்லாததை மொழிதலோடு மட்டும்போகாமல், பொய்த்து ஒழுகுதலையுந் தன்னுள் அடக்கி நிற்குமெனவுஞ் சிலர் கொள்வர். உண்மை யென்பது உள்ளது எனப் பொருட்படுதலால், உண்மையல்லாத பொய்மையானது, உள்ளதல்லாதனவற்றை உண்மையாகப் பேசுதல் எனக் கருதப்படும். இப்பாதகமானது இத்துணை விகாரமானதாயினும், விகாரமானதென நம்மிற் சிறுவர் முதல் பெரியர்வரை எவருந் தெள்ளிதில் அறியவராயினும், அநுதினமும் நம்மத்தியில் இது உலாவித்திரிந்து வருவதும், அதற்கு அநேகர் அடிமை பூண்டொழுகுதலும், மிக்க வியப்பேயாகும். பொய்மை பேசாதவர் தொகையானது வெகு சுருக்கமென்பது, நாம் அடிக்கடி "ஆ, அரிச்சந்திரன் வீட்டுக்கிவர் அடுத்த வீட்டுக்காரர்" என்பதாக எவரையும் எளனஞ் செய்யும் இம்மொழிகளிலேயே தெளிவு படும்.

அந்தோ! இக்கொடிய பாதகத்தின் தீச்செயலை உன்னவுங் கூடுமோ? தூயமனத்தினை யசுத்தமாக்கி, உள்ளக்களிப்பை ஒருங்கே யழித்து, மனச்சமாதானமென்பதினை வேருடன் பிடுங்கியெறிந்து, கௌரவத்தினைக் களைந்து, முகத்தைக்கருக்கி யெவரையும் பாவிகளுட்பாவிகளாக்க வல்லதிதுவென மொழியினும் போதாது. தன்னுடன் உறவு கொண்டமற்ற நான்கு பாதகங்களுக்கும் பிறப்பிடமும் வளர்ப்பிடமுமிதுவே. இது தானெனச் சொல்லினுங் காணாது. தெய்வ அருளைச் சிதறடித்து, மனிதருள் ஐக்கியக் குறைவையும், தீ பைகளையும் பெருகச்செய்து, குலங்குடிகளைக் கொல்லுந்தகைத்திதுவெனக் கொள்ளினும் ஒவ்வாது. அது இழைக்குந் தீச்செயல்களை எவர்தான் உரைத்தல் இயையும்? இத்துணைச் சிறப்பெய்திய இப்பொய்மையானது எத்தேசத்தருள்ளும் சிறிதும் இருக்குமட்டும் அவருக்கு க்ஷேமகாலமன்னியில் க்ஷாம காலமே கதியாகுமென்று சொல்லவும் வேண்டுமோ.

இது மாத்திரமோ! இப்பாதகத்தில் இன்னொரு விசேஷமுண்டு. பொய்யை மறைக்கப் பொய்யும்வேண்டுமே! தன்னைத்தானே யீனுமரியதிறம் அமைந்துள்ளது. ஆதலிற்போலும், இது, பஞ்சமாபாதகங்களுள் முதலிடங் கொடுக்கப்பட்டுக் கௌரவப்படுத்தப்பட்டது!!

உண்மையிலில்லாததை இருப்பதாகவும், இருப்பனவற்றை இல்லாவாகவும், மாறிப்பேசுவதும் மாறியொழுகுவதுமட்டும் பொய்யென்பதல்ல. ஒன்றைப் பலவாக்கியும் பலவற்றினை யொன்றாக்கியுங் கூட்டிக் குறைத்து மொழிதலும் பொய்யேயாகும். ஆகவே, "உயர்வு நவிற்சியணி (Exaggeration or Hyperbole) யும் பொய்யெனும்படையில் வகுத்த ஒரு அணியே யாகுமெனக் கொள்ளல்வேண்டும்.

மேற்றேயத்தார் கீழ்த்தேயத்தாராகிய நாம் இக்குற்றத்துக்கு வெகுகாலமாக ஆளாகியிருந்துவருகிறோமென்பதை அடிக்கடி சுட்டிக்காட்டி இழித்துப் பேசுகிறார்கள். நம் கவிகளே இதற்கு ஆதிகாரணமென எமக்குத் தோன்றுகின்றது. எந்த ஸ்தல புராணத்திலாவது நாடுநகரப் படலங்களில் உண்மைகாண்டல் சாத்தியமான காரியமாவென்று சிறிது நேரம் யோசிப்பின், ‘இல்லை" என்று உறுதியான பதில் கூசாமல் எவரிடமும் கூறலாம்.

புராணீகர்கள் தம்முள் ஒருவருக்கொருவர் முரணி, யார் அதிக விந்நியாசமான பொய் சொல்லுகிறதென்பதான ஒரு கக்ஷியேற்படுத்திக்கொண்டு பொய் சொல்லுவதுபோல் தோன்றுவதேயல்லாமல், வேறில்லை. இதனால் ஏதோ புராணங்களை யெல்லாம் பொய்யெனச் சொல்லிவிட வந்ததாக வைத்துக் கொள்ளக்கூடாது. அதுவேறு கேள்வி. புராணவருணனைகளைமட்டுங் குறித்துச் சொன்னதைத் தவிர வேறில்லை. மற்றவர்கள் இங்ஙனம் பெருக்கிக் குறைத்துப் பேசுவதினாலும் இவர்கள் பேசுவது மிக்கத் தீங்கை விளைக்கக்கூடியதாயிருக்கிறது.

ஏனெனில், இருவர் கூடித்தமக்குள் பேசி முடிக்கும் பொய் அவர்களைத் தாண்டி அயலாரிடம் போவது துர்லபம். மேலும் மற்றவர்கள் கவனித்துப் பின்பற்றக்கூடிய அவ்வளவு மேம்பாடு இவர்களுக் கிருக்கவுமிராது. ஆனால் பலரும் வாசிக்கவென்றே எழுதுபவர்களும், பலரும் சிரேஷ்டமான அறிவாளிகளெனப் பிறரால் மதிக்கப்படுபவர்களுமாகிய இந்நூலாசிரியர்களாகிய இவர்களே இங்ஙனங் குற்றம் இழைக்கின், உலகு என்பாடுபடாது? ஆனால் ஒன்று. இவர்கள் வேண்டுமென்று செய்ததில்லையாகலாம், பொய்யென்று பிறர் அறிவரேயென்று நம்பி எழுதியிருக்கலாம். எவ்வளவு காலம், யார் யார் இவ்விதம் அறியவல்லாரென்பதையும் உணர்ந்துஎழுதுதலன்றோமேன்மை?

"மூன்று கருங்காக்கை" (The Three Black Crows)என்ற ஒரு சிறுபாடல் ஆங்கிலங் கற்ற சிலருக்குத் தெரியவந்திருக்கலாம். அதாவது:—ஒருவர் தன் நண்பரிடம் ஒரு மனிதன் மூன்று கருங்காக்கைகளை வாந்திசெய்துவிட்டதாகச் சொன்னானாம். யார் சொன்னது எவர் சொன்னதென்று அலசி விசாரிக்குங்காலையில், "இல்லைஇரண்டுதா"னென்று அடுத்தபடியிலும், "இல்லை ஒன்றே"யென்று அதற்கடுத்தபடியிலும்ரூபகமாய்விடக், கடோசியாய்வாந்தியெடுத்தவனிடமே போய்ச்சேர்ந்தார்கள். "ஏதோ, கருப்புநிறமாய்ச் சிறிது பித்தம் வாந்திசெய்தது உண்மைதான்"எனஇவர்கள் ஞாபகமூட்டியதின் பேரில் ஒத்துக்கொண்டானாம்!

இத்தகைய உயர்வுநவிற்சிகளும் தாழ்வு நவிற்சிகளும் மாறுநவிற்சிகளே-அதாவது—தெளிவான பாஷையில்—பொய்களே என்று கொள்ளல்வேண்டும். முழுப் பொய்களையும்விட இவைகள் மிகவும் வெறுக்கத்தக்கன. மெய்

கலந்த பொய்யானது தனிப்பொய்யினும் வெல்லற்கரியதென்னும் உண்மையை அனுதினம் நமது கோர்ட்டுகளில் எத்தனை கக்ஷிக்காரர்கள், வக்கீல்கள், நியாயாதிபதிகள் ரூபகாரப்படுத்தி வருகிறார்கள். ஒரு மேற்றிசைப் பெரியோர் ஒரு சந்தர்ப்பத்தில், நம் இந்திய தேசத்தில் வழக்குகள் என் ஓய்வதில்லை என்னும் கேள்வியை விசாரித்துவருங்காலையில், "அணுப்பிரமாண மெய்யுடன் அணுப்பிரமாணங்களாகப் பொய்யைக் கலக்கும் அவர் சாதுரியமே அதன் காரண"மெனச் சொல்லி முடிக்கிறார். இது வெகு பரிதாபமே!

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்பதான திருவள்ளுவ நாயனார் வாக்கினை அநேகர் தமக்கு வேண்டுமாறு பொருள்படுத்தித் தம் பொய்மைக்குப் பூண் கட்டிக்கொள்ளவும் எத்தனிக்கிறார்கள். இது அதினும் பரிதாபமான விஷயமே! வேண்டும்போது பொய் பேசலாமென்ச் சொல்லிவிடாமலும், புரைதீர்ந்த நன்மைபயக்குமெனினும் பொய்மையும் வாய்மையே யாகும் எனப் புகன்றிடாமலும்—அவர் எவ்வளவு நிதானமாகக் கருதுகிறார் என்பதை யாவரும் கவனித்தல் வேண்டும். நன்மை யெல்லாம் அவர் குறிக்காதபடி, புரைதீர்ந்த நன்மை ஒன்றினையே குறித்திருக்கின்றார். எதுபுரை, எது புரையிலாதது என்பதைக்கவனித்தால் அது அநேக நன்மைகளை இந்தத் தொகுப்பிலிருந்து எடுத்துவிடும். மேலும் அத்தகைய புரைதீர்ந்த நன்மையைப் பயக்குமேல், இப்பொய்மையும் வாய்மையாய்விடுமோவெனிலோ, இல்லை இல்லை. "வாய்மையிடத்த" என்றுமட்டுமேகொள்ளுகிறார். ஆகையால் வாய்மையாய் விடமாட்டாதென்பதுவே அவருடைய கருத்துமென்பது தெளிவாகின்றதல்லவா?

அநேகமாய்ப் பொய் பேசுவது சில காரணங்களை முன்னிட்டேயாகும். பழக்கம், மடமை, மனத்தளர்வு, பயம், தீச்சித்த மிவைகளாலேயே ஏற்படும். இவைகளை யெல்லாம் வேருடன் அறுத்துப் பொய்மையை அதன் பந்து பரிவாரங்களுடன் நம்மத்தியினின்றும் தூரத்திவிடல் வேண்டும். பொய்யொன்றுமறையின், அநேகவிதமான பாதகங்களும் தலையெடுக்க வழியிராது. ஒருதிருடனொருவன் பொய் சொல்வதில்லையென்ற விரதங்கொண்டபின் ஒரு அரையனுடைய மனையிற் திருடி அகப்பட்டுக் கொண்டகாலையில், முழுவதும் உண்மையைப் பேசுவதைக் கூட்டுத் திருடனாயிருந்து வேலை செய்த இராஜனேகேட்டு, உண்மைக்குகந்து மந்திரியாக வைத்துக்கொண்டதாக நமக்குள ஒரு பழங்கதை நடமாட்டமுண்டு. அது கதையேயாகினும், வாய்மை பேசுதலின் சிறப்பை எவ்வளவு தெளிவாக விளையாத சிறு மனதுகளுக்குக் காட்டுகிறதென்பதை யாவருங் கவனிக்கத்தக்கது.

ஆகவே, பொய்யைப் பொய்யாக்கிச், சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுதலே முறைமை. அதுவே சன்மார்க்கங்களுளெல்லாம் தலையறம். மோக்ஷலோகம் விரும்பியோர்க்குக் கபாடந் திறக்குந் திறவுகோல். அதுவே லௌகிக பதத்தைத் தேடுபவருக்குஞ் சிறப்பினுஞ் செல்வம். போற்றிப் புகழ்ந்து எவராலும் வளர்க்கத்தக்கது. வெல்லிங்கடன் பிரபு (The Duke of Wellington) பாலியத்தில் உண்மைபேசிப் பொய்யைவென்று, தம்பிதா

வுக்கினியனுய சரிதையை எவர்தாம் இதுகாறும் கேட்டிராதவர்? யாவரே நம் அரிச்சந்திர மகாராசன் சத்தியத்துக்காகப் பட்ட கஷ்டங்களைக் கதாரூபமாகவும நாடகரூபமாகவும் கேட்டு மெச்சியிராதவர்? அவர் முனிக்கு உரைத்ததாகச் சொல்லப்படும் பாடலொன்றுமே சகல ஞானங்களையும் போதிக்கவல்லது. "பதியிழந்தனம் பாலனை ... ..."

☞ V. M. கலியாணசுந்தரம், பி. ஏ.

இரண்டு இராஜபுத்திரிகள்.

(Copy-Right Reserved.)

ஒருகாலத்தில் அமராபுரியில் ஆதித்யன் என்ற அரசன் நீதிவழுவாமல் அரசு புரிந்துவந்தான். இவனுக்குமூத்தமனைவியால் இரண்டு புத்திரிகளுண்டு.



மூத்த மனைவி இறந்தவுடன் வேறு ஒரு இராஜ கன்னிகையை இவன் மணம் புரிந்து கொண்டான். இவ்னது இரு குழந்தைகளையும் இவள் கவனிக்காமலும் அலக்ஷியமாயும் நடத்தி வந்தாள். இவர்களுக்குநல்லபோஜனமும், உண்டியும் கொடுப்பதேயில்லை. இவர்களுக்குச் செய்யவேண்டிய வேலையைக்கூட வேலைக்காரர்கள் செய்யப்போனால் இவள் அவர்களைக் கடிந்து கொள்வாள். ஆகையால் வேலைக்காரர்கள் இவ்விரண்டு பெண்மணிகளுக்கும் ஒன்றும் செய்யாமல் அவளுக்குப் பயந்திருந்தார்கள். ராஜனுக்கு இராஜாங்க விஷயங்களில் வேலையும் கவலையும் அதிகமிருந்தன. இவருக்கும் தம் புத்திரிகளைக் கவனிக்க அவகாசம் கிடையாது. இந்த இராஜபுத்திரிகளும் ஒரு பெரிய இராஜன் அரண்மனையிலிருந்தபோதிலும் இவாகள் தனிமையாகயிருந்தார்கள். இவர்கள் முகத்தில் சந்தோஷம் என்பதே கிடையாது.

ஒரு நாள் மூத்தவள் இராஜகிரகத்தைவிட்டு எங்கேயாவது ஓடிப்போகலாமென்று தீர்மானித்து தனது இளைய சகோதரியாகிய சந்திரமுகி

யைப் பார்த்து "என் கண்மணியே! இங்கு ஒருவரும் நம்மை விரும்புவதுமில்லை. நம்மை விசாரிப்பதுமில்லை. இளைய தாயாரோ நம்மைத் துன்பப் படுத்தி வருகிறாள், நீ என்னுடன் வருகிறாயா?" என்று கேட்டாள்.

சந்திரமுகி:—அக்கா, நாம் எங்கே போவது?

கங்காதேவி:—ஆ! நாம் காட்டுக்குப் போகலாம், அங்கு ஏராளமாகத் தின்ன பழங்கள் கிடைக்கலாம். மரக்கிளைகளைக்கொண்டு ஒரு சிறு குடிசை செய்து கொண்டு அதில் வைக்கோல் புஷ்பம் முதலியவைகளை வைத்துக் கொண்டு சுகமாய் ஜீவிக்கலாம்.

சந்திரமுகி:—மிகவும் நல்லது, அவ்விதமே செய்யலாம்; ஆனால் எனது பட்டு மஞ்சள் வர்ணப்புடவையைக் கட்டிக்கொண்டு நவரத்னங்களிழைத்த நகைகளைப்போட்டுக் கொள்ளுகிறேன். நீ முத்துஹாரத்தைதரித்துக்கொள்.

ஏனெனில் நாம் எவரையாவது சந்தித்தால் அவர்கள் நாம் ராஜகன்னிகைகள் என்று தெரிந்து கொள்ளட்டும்.

கங்காதேவி இதற்குச் சம்மதித்து இருவரும் வேண்டிய தங்கள் நகை, புடவை முதலியவைகளை எடுத்துக்கொண்டு 'கடவுளை நம்பினவர் கை விடப் படமாட்டார்' என்பதை இருவரும் மனதில் உறுதியாக எண்ணிக்கொண்டு அரண்மனையைவிட்டு காட்டுக்குப் புறப்பட்டார்கள். காட்டிற்குள் பிரவேசித்தவுடன் கங்காதேவி யோசனைசெய்து சந்திரமுகி நாம் இவ்விதம் விலையுயர்ந்த நகைகளையும், புடவையையும் அணிந்துகொண்டு போனால், ஜனங்கள் நாம் இராஜ கன்னிகைகளென்று தெரிந்து கொண்டு நம்மிடத்திலுள்ள பொருளை அபகரிக்க விரும்புவார்கள். ஆகையால் எல்லாவற்றையும் ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு, சாதாரண புடவையைத் தரித்துக்கொண்டு போவோம் என்றாள். அவ்விதமே சந்திரமுகி கையில் காப்பும் இடுப்பில் ஒட்டியாணம் அணிந்துகொண்டு மற்றவைகளை தன் தமக்கையினிடம் கொடுத்துவிட்டாள். கங்காதேவியும் ஒரு கை காப்பையும், ஒட்டியாணத்தையும் போட்டுக்கொண்டாள். இருவரும் தனிமையாக காட்டில் வெகுதூரம் சென்றார்கள். காட்டில் குரங்குகள் ஒரு மரக்கிளையில் ஊஞ்சலாடுவதையும், பச்சைக்கிளிகள் சூரிய வெளிச்சத்தால் பளபளப்பாய் மின்னிக்கொண்டு பறந்து போவதையும், கண்டு களித்தார்கள். இவர்கள் கண் எதிரில் பலவித பழ விருக்ஷங்கள் தென்படவே, இவர்கள் வேண்டிய பழங்களைப் பறித்துப் புசித்தார்கள்.

சந்திரமுகி:—அக்கா, இது காடாக யிருந்தபோதிலும் நமது மனதுக்கு இவ்விடம் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறதல்லவா?

கங்காதேவி:—என் பிரியசகோதரி: அரண்மனைமுழுவது முட்களிருப்பதாக தோன்றிற்றேயொழிய இவ்விடம்போல் ரம்மியமாய் அது எப்பொழுதாவது நமது மனதில் தோன்றிற்ற? இல்லேவேயில்லை. நமக்கு கடவுளதான் துணை என்றாள்.

இவர்கள் காட்டில் இவ்விதம் போய்க்கொண்டிருக்கையில் ஒரு அழகான அரண்மனையைக் கண்டு ஆச்சரியங்கொண்டார்கள். அந்த அரண்மனை வெண்மையான சலவைக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. அதன் வாசற்படி திறந்திருந்தது. வாசற்படியின் மேல் பின் வருமாறு பொன் எழுத்தால் எழுதப்பட்டிருந்ததைக் கண்டார்கள்.

“கங்காதேவி! பயப்படாதே, உள்ளேபோ, இங்கே பொன்னும் வெள்ளியும் உனக்காக குவிந்திருக்கிறது.”

இருவரும் அதைப் பார்த்து வாசித்தவுடன் அது வேறுவிதமாய் மாறி பின் வருமாறு தோன்றிற்று!—

“சந்திரமுகி! அவளைப் பின் தொடர்ந்துபோ, குரூரமான விதி பட்சமாயிருப்பதைக் காண்பாய்.”

சந்திரமுகி:—அக்கா முதலில் உன்னைப்பற்றி தென்பட்டதைப்போல் இது அவ்வளவு நன்றாகயில்லை. என்னை பயப்படும்படி இது செய்கிறதே என்று நடுங்கிக்கொண்டு சொன்னாள்.

கங்காதேவி:—ஆம், நானும் பயப்படுகிறேன். இந்த அரண்மனை ஒரு இராக்ஷதனுக்குச் சொந்தமாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

சந்திரமுகி:—ராக்ஷசன் என்றால் என்ன?

கங்காதேவி:—ராக்ஷதர்கள் மனிதர்களைப் புசிப்பார்கள், பஞ்சமாபாதகத்திற் கஞ்சார்கள். காட்டின் மத்தியில் ராக்ஷதர்களைத் தவிர மற்றெவரும் இதைப்போன்ற ஒரு அரமனையைக் கட்டியிருக்க மாட்டார்கள். ராக்ஷதன் இப்பொழுது இதனுள் இல்லைபோல் தோன்றுகிறது. அவன் வெளியிற் போயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

சந்திரமுகி:—அவன் நினைத்தபோது இங்கு வருவானே. நாம் வேறெங்காவது போகலாமென்று சொல்லி தன் அக்காள் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். இதனால் மிக்க பயப்பட்டவளைப்போல் காணப்பட்டாள்.

இவ்விதம் இவ்விரு பெண்மணிகள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது இவர்களுக்கு நன்மை செய்ய வேண்டு மென்று வனதேவதை கருதி நரிவேடம் பூண்டு இவர்களிடத்திற்கு ஓடிவந்தது.

நரி:—"நீங்கள் நினைப்பது சரி. அது ஒரு ராக்ஷசனுடையதுதான். ஆனால் அவன் வெகுதூரம் சென்றிருக்கிறான். அவன் வரவெகுகாலம் பிடிக்கும். அவன்வருமளவும் நீங்கள் அவன் அரமனையில் சௌக்யமாக யாதொரு பயமின்றி வசிக்கலாம். அவன் திரும்பி வரும்பொழுது நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மாயமாய் ஓடிப்போயிற்று.

நரி இவ்விதம் சொன்னதைக் கேட்ட இரு இராஜபுத்திரிகளும் தைரியங்கொண்டு அரமனை வாசலில் புகுந்து உட்சென்றார்கள். அங்கே பற்பல வர்ணமுள்ள பட்டு பீதாம்பரங்களும், நவரத்னங்களிழைத்த நகைகளும், பொன், வெள்ளிப் பாத்திரங்களும் ஏராளமாகயிருந்தன. மேலும் அங்கு ஒரு அழகிய சிறு தடாக மிருந்தது. அதைச் சுற்றிலும் சலவைக்கல் படிக்கட்டு களிருந்தன. ஜலத்தில் அழகான செந்தாமரை புஷ்பங்களிருந்தன. போஜனத்திற்கு வேண்டிய நெய், தயிர், பால் தவிர மற்றசாமான்களும் ஏராளமாயிருந்தன.

நரி தினம் இவர்களுக்கு நெய், தயிர் பால் கொண்டுவந்து கொடுக்கும். இரவில் அந்த அரமனையில் காவலிருக்கும். இவர் களுக்கு பயம் நீங்கிற்று. இவாகள் உடனே அத்திவ்ய தடாகத்தில் ஸ்நாநம் செய்து தங்கள் வஸ்திரங்களை அணிந்துகொண்டு பேருக்கு ஒரு தாமரைப் புஷ்பத்தை எடுத்து தலையில் தரித்துக் கொண்டார்கள். இவர்கள் குழந்தைப்பருவ முதற்கொண்டு இவர்களுக்குத் தாமரைப் புஷ்பம் மிகப்பிரியம். இவர்கள் இப் புஷ்பத்தை அப்பருவம் முதற்கொண்டு தரித்துக்கொள்வது வழக்கம்.

பின்பு சமையல் செய்து இருவரும் புசித்து விட்டு சிறிது நேரம் அவ் வீட்டைச்சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தபின் நித்திரைக்குச் சென்றார்கள்.

மறு நாள் கங்காதேவி சந்திரமுகியைப்பார்த்து என் கண்மணி! வீட்டில் நீதனிமையாக யிருக்கும் பொழுது அந்நியர்கள் எவராவது வந்து குடிக்கத் தண்ணீராவது புசிக்க ஆகாரமாவது கேட்டால் அவர்களிடத்திற்குப் போகுமுன், கரியைப் பொடியாக்கி உன் முகத்தில் தடவிக்கொண்டும், கந்

தைத் துணியைத் தரித்துக்கொண்டும் போக மறக்காதே. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

சந்திரமுகி:—அக்கா, ஏன் அவ்விதம் முகத்தை விகாரப்படுத்திக் கொள்ளல் வேண்டும்?

கங்காதேவி:—ஏனெனில், நீ வெகு அழகுள்ளவளென்பதை அவர்கள் பார்த்து தெரிந்துகொண்டால் உன்னை அவர்கள் இட்டுக்கொண்டு தங்களிருப்பிடத்திற்குப் போய்விடுவார்கள். மறுபடியும் நாமிருவரும் சந்திக்க முடியாது. நாம் பிரிந்து போய்விடுவோம்.

சந்திரமுகி:—நல்லது, அக்கா! அப்படியே செய்துகொள்ளுகிறேன். நீயும் அவ்விதம் செய்துகொள்ளுவது நலமென்று எண்ணுகிறேன். ஏனெனில் என்னைவிட நீதான் மிக்க சௌந்தரியமுள்ளவளென்று நம் இராஜ்யத்தில் ஒவ்வொருவரும் சொல்லுகிறார்கள்.

கங்காதேவி:—நீ சொல்வதுபோல் நான் அதிக அழகுள்ளவளல்ல. நாமிருவரும் ரூபவதிகள்தான். நாம் சிறிதுநேரம தெளிவாய தடாக ஜலத்தில் நமது முகத்தைப் பார்த்துக்கொள்வோம்.

இருவரும் அழகிய தடாக ஜலத்தில் குனிந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். இப்படி பார்த்தபோது யார் அதிக அழகுள்ளவளென்று சொல்ல முடியவில்லை. ஏனெனில் இருவரும் அழகு பொருந்திய மேனியுடையவர்கள். இவர்கள் கண்களோ நக்ஷத்திரங்களுக்கொப்பாயிருந்தன. இவர்கள் பற்களோ நல்ல விலையுயர்ந்த முத்துக்களை விட வெண்மையாகயிருந்தன. மெல்லியதேகமுடையவர்களின் அவயவங்கள் பொன்னைப்போல் பளபளப்பாயிருந்தன. ஆனால் கங்காதேவி மாத்திரம் சந்திரமுகியைவிட உயரமானவள். இதுதான் வித்யாசம். பின்பு இவர்கள் ஸ்நானஞ் செய்துவிட்டு சமையல் செய்து கடவுளை வணங்கி அன்னமுண்டு நித்திரை செய்தார்கள். சிறிதுநேரம் கழித்து காட்டி

னுள்ள நானுவித செடி கொடிகளையும், புஷ்பங்களையும், பழங்களையும், கண்டு களிப்பார்கள். இவர்களுக்கு வேண்டிய புஷ்பங்களையும், பழங்களையும் அரமனைக்குக் கொண்டுவருவார்கள். இவ்விதம் இவ்விரு ராஜகன்னிகைகள் தங்கள் பந்துக்கள முதலியவர்களைவிட்டு அரண்யத்தில் வசித்து காலம் கழிக்க வேண்டியிருந்தது.

ஒருநாள் காலையில் சந்திரமுகி நரியைக் கண்டு பேசுவதற்காக அரமனையிலிருந்து காட்டுக்குள சிறிது தூரம் சென்ருள். இவள் வெளியிற் போன பொழுது ஒரு ராஜகுமாரன் வேட்டையாடி களைத்து நாவறண்டு தண்ணீர் பருக வேண்டுமென்ற எண்ணத்துடன் அரமனையைக்கண்டு சந்தோஷத்துடன் வாசற்படியண்டை தனது வேலைக்காரனுடன் வந்தான். அங்குமிங்கும் நீர் ஒடையாவது அல்லது குளமாவது அரமனையைச் சுற்றிலு மிருக்காதாவென்று தேடிப்பார்த்தார்கள. ஆனல் நீர் ஓடையும் குளமுமில்லாததைக்கண்டு வெயில் உக்கிரத்தினுலும் வேட்டை ஆடினதினுலுண்டான சிரமத்தாலும் தாகம் மேலிட்டு வாசற்படியைத் தாண்டி உள் கதவைத் தட்டினர்கள். கங்காதேவி எவரோ வந்திருக்கிருர்களே என்று நினைத்து கந்தல் துணியைத்தனது பட்டுப்புடவையின்மேல் சுற்றிக்கொண்டும், முகத்தில் கரியைப்பொடி செய்து பூசிக்கொண்டும் கதவைத் திறந்தாள். இராஜகுமாரனுடைய வேலைக்காரர்கள் வியப்பான பார்வையுடன் அவலக்ஷண முகத்துடன் கந்தைத்துணியைத்தரித்த பெண்ணல் இக்கதவு திறக்கப்பட்டவுடன் வேலைக்காரர்கள் நகைத்தார்கள்; ஆனல் இராஜகுமாரனே அதிசிந்தையாய் அவளை உற்றுப்பார்த்தான்.

“இவளுடைய முகம், கை கால்கள் முதலியவைகளைச் சுத்திசெய்து நல்ல வஸ்திரம் இவள் தரித்துக்கொண்டால், இவள் வெகு அழகுள்ளவளாகத் தென்படுவாள்” என்று சொன்னன் அரசகுமாரன்.

கங்காதேவி இவன் பேசினபேச்சை அறிந்துகொள்ள முடியவில்லை; ஆகையால் அரசன் தாகம் அதிகரிக்கிறதென்று ஜாடைகாட்டவே, அவள் உடனே உட்சென்று ஒரு குடம் நிரம்ப தண்ணீர் எடுத்துவந்து அரசகுமாரனுக்குக்கொடுத்தாள்.

உடனே அரசகுமாரன் தண்ணீரைக்குடியாமல் அதில் சிறிது தண்ணீர் எடுத்து அவள் தலை, முகம், கை, கால்களில் தெளித்தான்.

ஓ! ஓ! வென்று கங்காதேவி திடுக்கிட்டுத் திரும்பிப்போக கூச்சலிட்டாள். ஹோ! ஹோ!வென்று வேட்டைக்கு வந்தவர்கள்சத்தம்செய்தார்கள்.

ஏனெனில் தண்ணீர் இவள் முகம், கை, கால்களில் பட்டவுடன் கரி கறைந்து இவள்வெகு அழகுபொருந்திய பெண்மணியாகத் தென்பட்டாள். இவள் கந்தைத்துணியைத் தரித்திருந்த போதிலும் இவள் இன்னுளென்று அறிந்து கொள்ளாமலும், இவளை மணம் புரிந்துகொள்ள மிக்க ஆவல் கொண்டான்.

உடனே அவள் கையைப்பிடித்துக்கொண்டு அவள் கந்தைத்துணியை சந்தேகப்பட்டு மெதுவாக எடுத்தான். அதற்குள் நல்லவிலையுயர்ந்த அழகான நீலவர்ணமுள்ள பட்டாடையும், இவள் கழுத்தில் நல்ல முத்துஹாரமுமிருப்பதையும் கண்டு மகிழ்ந்தான்.

"நான் உன்னை என் ராஜ்யத்திற்கு இட்டுக்கொண்டு போய் என் தாய் தந்தையர்களுக்குக் காண்பித்து உன்னை மணம் புரிகிறேன்" என்றான்.

இவன் வேறு தேசத்து அரசன். இவன் பாஷை வேறு. இவள் பாஷை வேறு. ஆகையால் இவன் சொன்னதொன்றும் இவளுக்கு அர்த்தமாகவில்லை. இவள் மேலும் மிகப் பயப்பட்டாள். ஐயோ எனது பிரிய சகோதரி சந்திரமுகி இன்னும் வரவில்லை என்று வருந்தினாள். உடனே இவர்களிடத்திலிருந்த ஒரு மூடுபல்லக்கில் இவளை உட்காரும்படி செய்தார்கள். இவள் அப்பொழுது பயமடைந்ததற்கு அளவே கிடையாது. போகிகள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போனார்கள். ஓ சந்திரமுகி! நான் இல்லாமல் நீ என்ன செய்வாய்? எப்படி நான் உன்னைப் பார்ப்பது எனப் புலம்பினாள். போகிகள் சிறு குன்றுகளைத் தாண்டிக்கொண்டும், பள்ளத்தாக்கு முதலியவைகளைக் கடந்தும் சென்றார்கள். இராஜகுமாரன் குதிரையின் மீது ஏறிக்கொண்டு இவர்களுடன் போனான்.

கங்காதேவிக்கு இன்னது செய்கிறதென்று தெரியவில்லை. தன்னுடன் பேசி தன் எண்ணத்தை அறிந்து கொள்பவர் ஒருவருமில்லை, என்ன செய்வாள்? ஓ சந்திரமுகி! என் கண்மணி! என் தங்கையே! உன்னை விட்டுப்பிரிய நேரிட்டதே! ஐயோ! உன்னை எப்படி எப்பொழுது காண்பேன்? ஓ கடவுளே! நீங்கள்தான் என் அருமைத் தங்கையை ரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லுகையில் இவள் சிறிது தூரம் போய்விட்டாள். உடனே ஒருயோசனை உண்டானது. தனது தங்கை தான்போன வழியைக் கண்டுபிடித்து அதன் வழியாக தன்னிடம் வருமாறு தன் கழுத்தில் அணிந்திருந்த முத்து மாலையிலிருந்து முத்துக்களை உருவி, தனது புடவையில் ஒரு பக்கம் கிழித்து, ஒவ்வொரு முத்துவைத்து சிறு மூட்டையாகச் செய்து, தான் செல்லும் வழியில் போட்டுக் கொண்டுவந்தாள். இவ்விதம் தன்னைக் கொண்டு போகும் வழிதோறும் சிறு மூட்டையைப் போட்டுக் கொண்டுபோனாள். கடைசியாக அரசகுமாரன் அரண்மனைக்கு வந்துவிட்டான். இவள் அரண்மனை வாசலிலும் சிலமுத்துக்களைச் சிதறினாள்; மீதியிருந்த மூட்டைகளையும் நாலாபக்கங்களிலும் போட்டுவைத்தாள்.

அரசகுமாரன் தனக்கு எதேச்சையாகக் கிடைத்த பெண் ரத்தனத்தை தன் தாய் தந்தைக்குக் காண்பித்தான். அவர்கள் இவளுடைய ரூபலாவண்ணியத்தைக் கண்டு மகிழ்ந்து "நமது குமாரனுக்கு கடவுள்தான் இச்சீதாதேவியைப் போன்ற பெண்மணியை யளித்திருக்கிறார்" என்று அவளைத் தங்களது குமாரனுக்கு விவாகம் செய்துவைக்க முகூர்த்த நாள் ஏற்படுத்தினார்கள்.

கங்காதேவி அரமனைக்கு வந்தவுடன் எப்படி முன் சந்திரமுகி, "அவளைப் பின்தொடர்ந்துபோ என்ற பொன் எழுத்து தென்பட்டதோ, அவ்விதமே இப்பொழுதும் தென்பட்டு, அவளும் நரியின் சகாயத்தில் இங்கு ஒரு வேளை வரக்கூடாதா" வென்றும், மேலும் தான் வழியில் போட்ட முடிச்சலைக் கண்டாவது அதன் மார்க்கமாக இங்கு வந்து சேரக்கூடாதாவெனறும் நினைக்கலானாள்.

இந்தப் புதிய அரமனையில் இராஜனும், இராணியும் இவளை வெகு அன்பாகப் பார்த்து வந்தார்கள். இவளுக்கு வேண்டிய நல்ல விலையுயர்ந்த நகை

களையும், புடவைகளையும் கொடுத்தார்கள். வேண்டியபோது அறுசுவையோடு கூடிய ஆகாராதிகளையும் கொடுத்து வந்தார்கள். இங்கு இவளுக்கு யாதொரு குறையுமில்லை. ஆனால் இவள்விசனமுள்ளவளாய் தென்பட்டாள். எப்பொழுதும் தன் அருமைச் சகோதரியைப்பற்றி நினைந்து, நினைந்து அழுவாள். நித்திரையும் சரியாய் வராது. எப்பொழுதும் கடவுளைத் தியானம் செய்துகொண்டிருப்பாள். இவளுக்கும் இராசகுமாரனுக்கும் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

நிற்க, சந்திரமுகி நரியைத்தேடிப்பார்த்தும் அன்று அகப்படாமையால் அரமனைக்கு வந்து தனது அக்காளைப்பார்த்தாள். அவளில்லை. அரமனை முழுவதும் ஓடி ஓடி தேடிப் பார்த்தாள். கங்கா! கங்கா! எங்கிருக்கிறாய்! என்று கூவிக்கொண்டுபோய்ப் பார்த்தாள். பதில் வரவில்லை. மெத்தையில் போய்ப்பார்த்தாள். அங்கும் தனது சகோதரி யில்லாததைக் கண்டு மிகத் துன்புற்று அரமனையில் ஓரிடத்தில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள்.

C. S. R.

சர்வஜித்.

45 - வது அத்தியாயம்.

ஸர்வஜித்தைக் காப்பாற்றுகிறதற்கு சுரேந்திரன் முதலியோர்கள் எப்படி சமயத்தில் வந்துசேர்ந்தார்களென்பதை நாம் இவ்வத்தியாயத்தில் விவரித்துக் கூறுவோம்.

முன்னொரு அத்தியாயத்தின் முடிவில் மலைக்கோட்டையிலிருந்து தப்பியோடிவந்த முகுந்தனும், கோபாலனும், சுரேந்திரனும், காட்டுஸ்திரீயும் மலையதிபதிகளால் பிடிபட்டு, காட்டுஸ்திரீ மண்டையிலடிபட்டு வீழ்த்தப்பட்டாளென்பதையும் தெரிவித்தோம். மூர்க்கங்கொண்ட காட்டரசர்கள் அவள் இறந்துவிட்டாளென நம்பி அவள் விழுந்த விடத்திலேயே அவளை விட்டுவிட்டு, மற்றவர்களைக் கொண்டுபோய் காலதாமதமின்றி உயிரைவாங்கிவிடும்படி தங்களாட்களுக்கு தாக்கீது செய்தார்கள். ஆனால் இக் கட்டளைகள் அவர்கள் வாயிலிருந்து பிறந்து அப்படியே கிங்கரர்களும் கைதிகளைப்

பிடிக்க வருவதற்குள்ளாக, சந்திர வெளிச்சத்திற்கு முற்றும் மாறான ஒரு பிரகாசம் அவர்களருகில் திடீரெனக் கிளம்பிற்று. இப் பிரகாசத்தின் மத்தியில் வீரனும், சீமாட்டியும் தோன்றினார்கள். மலையதிபதிகளும் அவர்களுடைய ஆட்களும் அடங்காத பயத்தால் விரைந்த கட்டைகள்போல் நின்றார்கள். கைகால்களை அசைக்கக்கூட முடியவில்லை. இதைக் கண்ட சுரேந்திரன் முதலான கைதிகளுக்கு அவர்களுக்கே தெரியாத தைரியமும் உத்ஸாகமும் பிறக்கவே, அவ்விடத்தைவிட்டு ஒரே ஓட்டமாய் ஓட்டம் பிடித்தார்கள். மலையதிபதிகள் முதலானோர்க்கு திகிலைக்கொடுத்த உருவங்கள் எக்காரணத்தாலோ கைதிகளுக்கு தைரியத்தைக் கொடுத்தன.

மெள்ளமெள்ள வெளிச்சமும் உருவங்களும் மறைந்தன. அவைகள் மறையவே அங்கு நின்றவர்கள் ஒருவரையொருவர் வாய்ப்பேசாமலே அச்சத்துடன் பார்த்து நின்றுகொண் டிருந்தார்கள். ஒருவருக்கொருவர் வாய் திறந்து பேசிக்கொள்ளாதிருந்தபோதிலும். எல்லாருடைய மனதிலும் ஒரே எண்ணமிருந்து கொண்டிருந்தது. அதாவது, ஸர்வஜித்தின் விஷயத்தில் ஈசுவரனே பாடுபடுகிறார். இனி ஓடுகிறவர்களை மறுபடி பிடிக்க எத்தனித்தால் தவிர்க்கமுடியாத ஆபத்துக்கள் நேரிடக் கூடுமென்பதே. இந்த எண்ணம் ஏககாலத்தில் அவர்களுடைய மனதிலும் உதிக்கவே, மனவருத்தத்தோடு குதிரைகளை மலைக்கோட்டையை நோக்கித் திருப்பினார்கள்.

தங்களது கோட்டைக்குச் சென்றவுடன், சகோதரர்கள் தங்களது திகிலிலிருந்து சற்று நீங்கினவர்களாய், நடந்த விஷயத்தை ஒருமுறை மனதில் சிந்தனை செய்தார்கள். குண்டகீலன் மற்றவர்களைப் பார்த்து, "எனது தைரியசாலிகளே, இங்குவந்த கவிவாணர்களுடைய துரோக நடத்தையானது நமக்கு ஆபத்தைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. முதலாவது பிரபு புஷ்யமித்திரன் தனது மகனைப்பிடித்து நாங்கள் சிறைப்படுத்தி வைத்திருந்ததற்காக, நமக்குப் பிரதிசெய்ய ஆவலாயிருப்பான். இரண்டாவது அமராபுரியிலுள்ள நியாயாதிபதிகள், நாம் சுரேந்திரனைப் பிடித்துவைத்து குற்றமற்ற ஸர்வஜித்தை மரணதண்டனைக்குரிய குற்றத்திற குட்படுத்தினதைக் குறித்து நம்மைத் தகுந்த தண்டனைக் குட்படுத்த முயலுவார்கள். ஆனால் நமக்கு எவ்வித ஆபத்துகள் வந்தாலும் நமது முன்னோர்கள் செய்துவந்தது போலவே, நமது கோட்டை வாயில்களை தாளிட்டுக்கொண்டு நம்மைப் பிடிக்க வருகிறவர்களை உள்ளேவிடாமல் நமக்குயிர் இருக்கும்வரையில் போராடியே தீர்ப்போம். ஆகையால் எனது நண்பர்களே, என தெண்ணத்திற்கொத்து நடக்க இஷ்டமுள்ளவர்கள் தங்கள் கத்திகளைத் தொட்டுக்கொண்டு உங்கள் எசமானர்களுககு உயிர் போகும்வரையில் விசுவாசமாயிருக்கிறோமென்று சத்தியஞ்செய்து தாருங்கள்" என்றான். உடனே அந்த தீவட்டிகளின் வெளிச்சத்தில் பளீச் பளீச்சென்று பலகத்திகள் மின்னின; பல சப்தங்கள் ஒருமிக்க "நாங்கள் சத்தியஞ் செய்கிறோம்" என்று கத்தின.

ஆனால் இப்போது மலையதிபதிகளை விட்டுவிட்டு காட்டு ஸ்திரீயினிடத்தில் செலலுவோம். உண்மையில் மலையதிபதி யவளையடித்தபோது அவள இறக்கவில்லை; மூர்ச்சித்துவிட்டாள். பிரகாச அதிசயந்தோன்றி மணி ஒன்றாகி யிருக்கலாம். அவளுக்கு மெதுவாக பிரக்ஞை வந்துகொண்டிருந்தது. முற்றும ஞாபகம்வரவே, அவள் இருந்த இடததையும், கிடந்த நிலமையையும் அறிந்து, தான் அடிபட்டுக் கீழேவிழுந்ததெல்லாம் ஞாபகம்வந்தது. தன்னோடு தப்பி யோடிவந்த சுரேந்திரன் முதலானோர் மறுபடியும் பிடி

பட்டு மலையிலடைபட்டுப் போய்விட்டார்களென்று முடிவுசெய்தாள். "எல்லாம் வீணாய்விட்டது. எல்லாம் வீணாய்விட்டது" என்று காடுமுழுதும் எதிரொலி யிடும்படியாய் கூச்சலிட்டாள். "ஐயோ, எல்லாம்வீணாகிவிட்டதே! ஐயோ எல்லாம் வீணாகிவிட்டதே!!" என்றழுதாள்.

அவளையும் விட்டுவிட்டு தூக்குமரத்தி னடிக்குச்செல்வோம். அவ்விடம் இப்போது என்ன நிலையிலிருந்தது. சிறிது நேரத்திற்குமுன் எவ்விடத்தில் துக்கம் குடிகொண்டதுபோ லிருந்ததோ அதே இடத்தில் இப்போது அளவுகடந்த ஆச்சரியமும், வியப்பும், ஆநந்தமுமா யிருந்தது. அடங்காத சந்தோஷத்தால் எல்லா ஹிருதயங்களும் தத்தளித்தன.

இப்படியிருக்க, நித்யாநந்தர் எல்லோரையும் மண்டிபோட்டு பகவானுக்கு நன்றிசெலுத்த வேண்டுமென்றார். உடனே அப் பெருங்கூட்டம் முழங்காலிட்டு விழுந்தது. ஆயிரங்கணக்கான குரல்கள் நற்குணங்கள் பொருந்திய சிறுவனை மரணத்திலிருந்து காப்பாற்றினதற்காக பகவானைப் பிரார்த்தித்தன. இது முடிந்தவுடன் சுரேந்திரன், பழைய பகையை யெல்லாம் மறந்துபோய், ஸர்வஜித்தினிடமோடி அவனைக் கட்டிக்கொண்டான். சிறுவயதுமுதல் கூடி வளர்ந்துவந்த அவ்விருவர்களும் சகோதரர்போல் ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். பிறகு துவக்கம்முதல் முடிவுவரையில் ஸர்வஜித் குற்றவாளி யல்லவென்று மனதார நம்பிவந்த நித்தியாநந்தர் ஸர்வஜித்தை அணைத்துக்கொண்டார். ஜில்லா அதிகாரியும் ஸர்வஜித்தி னருகில்வந்து ஈசுவரனருளால் தப்பியதைக் குறித்துதான் மனப்பூர்வமாய் சந்தோஷித்ததாகச் சொன்னான். பிறகு அநங்கனைச் சார்ந்தவர்களும் புஷ்யமித்திரரைச் சார்ந்தவர்களும் ஸர்வஜித்தை வாழ்த்தினார்கள். மற்றக் கூட்டங்களெல்லாம் ஸர்வஜித்தை நெருங்கிச் சூழ்ந்துகொண்டது. அங்கிருந்த போர்வீரர்கள் கூட கண்ணீர்விட்டார்கள். ஒருவன் மாத்திரம் இச் சந்தோஷத்தில் கலக்காமல் இருந்தான். அவன்தான் தூக்கிட நியமிக்கப்பட்டவன். தனது அலுவல் இனி யவ்விடத்தில் தேவையில்லையென்று கண்டவுடன், மற்றவர்களுக்குத் தெரியாமல் அவன் அவ்விடத்தை விட்டோடிவிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கிருந்த ஜனங்கள் பிரபு அநங்கனைக் குறித்து கடிந்துபேசத் துவங்கினார்கள். ஏனெனில், பிரபு சுரேந்திரன் உயிருடன் திரும்பிவந்தது மல்லாமல், சர்வஜித்தை ஆவலுடன் கட்டிக்கொண்டதால், ஸர்வஜித் புஷ்யமித்திரருடைய மகனுக்கு யாதொரு தீங்கையும் செய்யவில்லை யென்பது நன்றாய் ஏற்பட்டது. இவ்வாறிருக்க, ஸர்வஜித் பிரபு அநங்கனிடத்தில் சுரேந்திரனைக் கொன்றதாக ஒத்துக்கொண்ட பேச்சானது அசம்பாவித மாய்விட்டது. ஸர்வஜித் அநங்கனது இருவேலையாட்களையும் கொன்றானென்பதும் பொய்யென்று சொல்லத் தடையென்ன? ஆகையால் ஆயிரங்கணக்கான அக்கூட்டம் தங்களது கோபாவேசத்தை மேலும்மேலும் வெளிக்காட்டிக் கொண்டுவரவே, ஜில்லா அதிகாரி பயந்து ஸர்வஜித்தைப் பார்த்து, "சிறுவனே, நீதப்பினதைக் குறித்துச் சந்தோஷப்படாதவர் ஒருவருமில்லை. உன்மேல் அபாண்டமான குற்றம் சுமத்தப்பட்டு நீ அநியாயமான தண்டனைக்குள்ளானாய் என்பதும் நன்றாய் விளங்குகிறது. இராசாங்கத்தார் பிரபு அநங்கனைப்பிடித்து அடைக்கவேண்டுமென்று தாக்கீது செய்யும் பக்ஷத்தில் நான் அதைக்காலதாமதமின்றி நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன். ஆனால் நியாயாதிபதிகள் செய்யவேண்டியதை ஜனங்களே செய்வது சரியல்ல. ஏற்கனவே, ஜனங்கள் பிரபு அநங்கனுக்குப் பிரதிப்பழி

செய்யவேண்டுமென்று கூக்குரல் செய்கிறார்கள்; இவ்வளவு பேர்களும் கோட்டையை நோக்கிச்செல்வதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அப்படிச் செய்தல் கலகத்திற் கிடங்கொடுத்து, உயிர்ச்சேதமாய் முடியும். ஆகையால் இச்சனங்களை நீயே சமாதானஞ்செய்து வீடுகளுக்கனுப்பி விடவேண்டும்" என்றான். நித்யாநந்தரும் ஜில்லா அதிகாரியோ டொத்துப்பேச, ஸர்வஜித் வந்திருந்தவர்களைப்பார்த்து பின்வருமாறு பேசினான். "சினேகிதர்களே, நீங்கள் என் விஷயத்தில் காட்டின அனுதாபத்திற்காக நான் எனது நன்றியை வார்த்தைகளால் வெளியிட இயலாதவனாயிருக்கிறேன். என்மேல் பழி சுமத்தினவனைக் குறித்து தகுந்த நியாயாதிபதிகளிடத்தில் நான் முறையிட்டுக் கொள்ளப்போகிறேன். நீங்கள் என்பேரில் உள்ள பிரியத்தால் கலகஞ்செய்தால் எனக்குப்பிரதிகூலமாய் முடியுமேயொழியே எனக்குச்சிறிதும் நன்மையைப் பயக்காது. நான் உங்களைக் கேட்டுக்கொள்வது யாதெனில், இங்கு வந்தவர்களாகிய நீங்கள் சாந்தமான மனதோடு வீடு சேருவீர்களென்பதே" யென்றான். அதற்கு அங்கிருந்த சிலர் "இத்தூக்குமரத்தை பிடுங்கியெறிந்து விட்டுப்போவோ" மென்றார்கள். அப்படியே தூக்குமரம் பிடுங்கப்பட்டு ஓடும் நதியில் போடப்பட்டது. இக்காரியம் முடிந்தவுடன் ஜனங்கள் தங்கள் தங்கள் வீடு சென்றார்கள்.

ஸர்வஜித் எங்கே செல்வது? அவனோ விடுவிக்கப்பட்டான். தன்மேல் குற்றஞ்சுமத்தின பாதகன் வீடுசேருவது நினைக்கக்கூடாத காரியம். இச்சந்தர்ப்பத்தில் பிரபு புஷ்யமித்திரர் வீட்டிற்குப்போகவும் எண்ணங்கொள்ளவில்லை. ஜில்லா அதிகாரி ஸர்வஜித்தை தனது வீட்டிற்கு வரும்படியாக வருந்தியழைத்தான். அதேகாலத்தில் நித்யாநந்தரும் ஸர்வஜித்தை தங்கள் மடத்திற்கு வரும்படி யழைத்தார். உடனே ஸர்வஜித் நித்யாநந்தருடைய வேண்டுகோளுக்கிசைந்தான். எல்லோரும் திரும்பினார்கள். திரும்பிப்போய்க் கொண்டிருக்கும்போது முகுந்தனும் கோபாலனும், தாங்கள் சுரேந்திரனை விடுவித்த கதையைச் சொன்னார்கள். முகுந்தன் ஸர்வஜித்தின் ஒடிந்த கத்தியை எடுத்துக்காட்டினான். பிரபு அநங்கன் சீமாட்டி லீலாவதியை மலையதிபதிகளுக்குப் பிடித்துக்கொடுத்து விடுவதாக ஒருபத்திரம் எழுதிக்கொடுத்ததாகச் சொல்லவே, ஸர்வஜித் தான்கேட்டது கனவோ என்று பிரமித்தான். ஆனால் முகுந்தன் அந்தப்பத்திரத்தை எடுத்துக்காட்டினவுடனே அவனது சந்தேகம் நீங்கிற்று. இதுநிற்க, சுரேந்திரன் ஸர்வஜித்தைப் பார்த்துச்சொன்னதாவது:—"எனது அருமையான ஸர்வஜித்தே! நான் கிடங்கில் சிறைப்பட்டுக் கிடந்த காலத்தில் இங்கு நடந்த முக்கிய விஷயங்களையெல்லாம் முகுந்தன் மூலமாய் அறிந்தேன். அயோக்கியனான அநங்கனுக்கு எனதருமை லீலாவதியை விவாகஞ் செய்துகொடுக்க இருந்தோமே என்பதை நினைக்கும்போது என் மனம் பதைக்கிறது. இருக்கட்டும், அவனுக்குத் தகுந்த சிக்ஷைசெய்யாமல் விடுவதில்லை. அவனுக்கு மாத்திரமல்ல, கிராதகர்களான காட்டுச் சகோதரர்களுக்கும் கடுமையான பிரதிசெய்தே தீரப்போகிறேன்" என்றான்.

"ஐயோ! பாவம், காட்டு ஸ்திரீயின் கதி பரிதாபமாய் முடிந்தது. மலைராசாக்கள் அவளை மண்டையிலடித்து கொன்றுபோட்டார்கள். அவளுடைய பிரேதத்தைச் சரியானபடி அடக்கஞ் செய்யவேண்டாமா?" என்றான் கோபாலன்.

உடனே பிரபு புஷ்யமித்திரரின் ஆட்களில் சிலர், அவள் விழுந்த இடத்தை தெரிவிக்கப்பட்டவர்களாய், உடனே காட்டிற் கனுப்பப்பட்டார்கள்.

ஆனல் அவர்கள் அங்கு வந்து பார்க்கும்போது அந்த ஸ்திரீ அவ்விடத்தில் இல்லை யென்பதை நாம் தெரிவிக்கவேண்டியதில்லை. இப்படியிருக்க மற்றவர்கள் தங்கள் தங்களுக்கு நேர்ந்த சம்பவங்களை சொல்லிக்கொண்டே சந்யாசிகளுடைய மடத்தை நெருங்கினர்கள். சுரேந்திரனும் ஸர்வஜித்தும் பிரிய வேண்டியதாயிற்று. ஸர்வஜித் ஸுரேந்திரனை தனியாய் கூட்டிச்சென்று சொல்லுகிறான்.

"உனது தகப்பனருக்கு நான் பல நமஸ்காரத்துடன் பின் வருவதைச் சொன்னதாகச்சொல்லவும். பல காரணங்களைக்கொண்டு நான் சிறிது காலம் உங்களுடைய குடும்பத்திலிருந்து பிரிந்து இருக்கவேண்டியது அவசியமெனப்படுகிறது. இப்படி நான் செய்வதை அவர் ஒ வித்தியாசமாக எண்ணக்கூடாதென்று நான்கேட்டுக்கொண்டதாகச் சொல்லவும். ஏனெனில் அவரது ஆக்ஞைகளை நான் சிரசில் தாங்கி நடப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறேன். ஆனல் நான் சீக்கிரம் அமராபுரி சென்று இராசாங்கத்தாரிடம் பிரபு அநங்கனல் நடந்த அநீதத்தை முறையிடுவதுடன், இராசாங்க சைன்யத்தில் ஒரு உத்தியோகத்தைப் பெறவேண்டுமென்ற ஆசையுமிருக்கிறது. ஆனல் எனக்கு ஒரு தயவுமாத்திரஞ் செய்யவேணும். கோபாலன் என்னேடு செல்லும்படி உத்தரவளிக்கவேணும்" என்றான்.

"நீ அதைப்பற்றி சந்தேகங்கொள்ளவேண்டாம் நாளைக்காலமே கோபாலன் உனது உடுப்புகளையெல்லாம் எடுத்துக்கொண்டு, எனது தகப்பனர் சொல்லி யனுப்புகிற செய்தியையும் கொண்டுவருவான் என்றான் சுரேந்திரன்.

எல்லாரும் பிரிந்து அவரவர்கள் செல்லவேண்டிய மார்க்கமாய்ச் சென்றார்கள்.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

பத்திராதிபர் குறிப்பு.

டெல்லியின் காட்சி.

இப்புராதன நகரத்தில் நமது அரசசக்ரவர்த்தியாரின் டர்பார் கூடுவதற்காக பற்பல வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ரோடுகள் செம்மையாக மேடுபள்ளமில்லாமல் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு பல கூடாரங்களுக்குச் செல்லுவதற்காக குறுக்கு ரயில் பாதைகள் போடப்பட்டு வருகின்றன. டர்பார் கூடும் ஸ்தலத்தில் அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உட்காரலாமாம். சிம்மாசனத்தை வைக்கும்படியான இடத்தைச் சமவாக்கி வருகிறார்களாம். இது பொன், வெள்ளியினல் செய்யப்பட்டும், மத்தியில் சல்வைக்கல் வைக்கப்பட்டுமிருக்குமாம். சிகரம் தாமிரத்தால் செய்யப்பட்டு பொன் முலாம் பூசப்பட்டிருக்கும். பாதி சக்கரம்போன்ற இடத்தில் சிம்மாசனம் அமைக்கப்பட்டிருக்கும். இதற்கு வெளியில் ஜனங்கள் உட்கார்ந்து டர்பார் வைபவத்தைக் கண்டு சந்தோஷிப்பார்கள். ஒவ்வொருவரும் ரூபா 2 கொடுத்து உள்ளேவரவேண்டும். இவ்விதம் வசூல்செய்தால் லக்ஷம்ரூபாய்க்குமேல் வசூலாகுமென மதிக்கப்படுகிறது.

சிம்மாசனத்தைச் சுற்றிலும் இராணுவ உத்தியோகஸ்தர்களும், இந்திய மன்னர்களும், பிரபுக்களும் உட்கார்ந்திருப்பார்கள். மத்தியில் நமது அரச சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் சிம்மாசனத்தில் வீற்றிருப்பார்கள். அப்பொழுதுள்ள காட்சி வெகு நன்றாக யிருக்குமென்பதற் கென்னதடை? தோட்டங்களும், பற்பல புஷ்பச்செடிகளும் வைக்கப்பட்டு வருகின்றன. இவ்விடத்திலேயே தந்தி, தபாலாபீசுகள் அமைக்கப்பட்டிருக்கும். டர்பார் வைபவத்தைப் பார்க்க தூரதேசங்களிலிருந்து வருபவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் "அட்வோகேட் ஆப் இந்தியா" என்றபத்திரிகையில் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் முழுவிவரம் கூடிய சிக்கிரத்தில் வெளிவரும். வெளிவந்தவுடன் நமது பத்திரிகையில் பிரசுரிப்போம்.

நித்திரை.

நாம் சாதாரணமாக இரவில் 10-மணிக்கு நித்திரைசெய்ய ஆரம்பித்து காலையில் 5-மணிக்கோ அல்லது 6-மணிக்கோ எழுந்திருக்கிறோம். நாம் தேக சௌக்யத்துடனும், பலத்துடனுமிருக்கவேண்டுமானால் மேற்சொல்லிய வண்ணம் நித்திரை செய்யக்கூடாதாம்.

10-மணிக்கு நித்திரைக்குச் சென்று 6-மணிக்கு எழுந்திருக்கிறதற்குப் பதிலாக, பின்வருமாறு இதை இரண்டு பாகங்களாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அதாவது 6-மணியிலிருந்து $8\frac{1}{2}$-மணி வரைக்கு மொருபாகம், இரவு 2-மணியிலிருந்து காலையில் $6\frac{1}{2}$-மணி வரைக்கும் மற்றொரு பாகம். இவ்விதம் நித்திரை செய்துவந்தால் மூளை சம்பந்தமாக உழைப்பவர்களுக்கு உற்சாகமும், பலமும், அதிகரிக்குமாம்.

இவ்விஷயத்தில் அநுபமுள்ள ஒரு வைத்தியர் இவ்வித அபிப்பிராயப் படுகிறார். இவ்விதம் மூளை சம்பந்தமாக யோசனை செய்பவர்கள் நித்திரை செய்யும் காலத்தை இரண்டு பாகமாகப்பிரித்து நித்திரை செய்துவரின் அவர்களுக்கு இவ்விதம் செய்வதின் பிரயோசனம் புலப்படுமென்றும் சொல்லுகிறார். ஒரேதடவையில் 8-மணி காலம் அல்லது 9-மணி காலம் தூங்குவது தேகாரோக்யத்திற்கு மிகவும் கெடுதலாம்.

ஒரு ஏழைப்பெண்மணிக்கு லக்ஷ்மி பிரசன்னம்.

ஹங்காரி என்ற பட்டணத்தில் ஒரு பெண் கால்சோடு விற்கும் கடையில் சோடுகளை விற்கும் வேலையிலமர்ந்திருந்தாள். தனக்கு கிடைக்கும் சொற்ப பணத்தைக்கொண்டு ஜீவனம் செய்துவருகையில், ஹார்க்ரேனி என்ற பிரம்மசாரி கனவான் இந்தக் கடைக்கு சோடு வாங்கச்சென்றாராம். அப்பொழுது இப்பெண்மணியைக் கண்டு அவளுடைய சம்பளத்தை என்னவென்று கேட்டாராம். அது மிகவும் சொற்பதொகை யென்பதை அறிந்து மிகப் பரிதாபப்பட்டு, சென்றுவிட்டாராம். ஒரு சமயம் இக்கடைக்கு

இவர் தமபென்று வந்து தனது சொத்துக்கள் யாவற்றுக்கும் இப்பெண் மணியை சுதந்தரவாதியாகச் செய்யப்போவதாக இப்பெண்ணிடத்தில் சொன்னபொழுது, இவள் அவருடைய அழுக்கும் கிழிந்ததுமுள்ள உடையைக் கண்டு இவர் புத்தி தடுமாறி இவ்விதம் சொல்லுகிறாரென்று நினைத்து சிரித்தாளாம். அவர் உண்மையாகவே நான் சொல்லுகிறேன் என்று உடனே பவுன்டன் பேனாவையும் ஒரு காகிதத்தையும் எடுத்து, உயில் எழுதி அப் பெண்மணிக்குக் காண்பித்துவிட்டு இரண்டு உத்தியோகஸ்தர் கையெழுத்து வாங்க வெளியிற் சென்று வாங்கிக்கொண்டு வேகமாகச் சென்றாராம். மோடார் வண்டியில் அகப்பட்டுக்கொண்டு சடுதியில் மரணமடைந்தார். மறுநாள் இப்பெண்மணிக்கு 26,000 பவுன் ஸ்திதி கிடைத்ததாம். இதல்லவோ லக்ஷ்மி கடாக்ஷம்!

பத்திராதிபர்.

Popular Lectures to Teachers employed in Ely. Schools, Madras—Elementary Science.

Examination:—PHYSICS.

I. ஸம்ச்லேஷம், ஆச்லேஷம், தந்து ஆகர்ஷண சக்தி, என்றால் என்ன? ஒவ்வொன்றுக்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக.

II. ரசாயன ஆகர்ஷணம் எவ்வித வஸ்துக்களுக்கு உண்டு? உதாஹரணங்களால் நிரூபிக்குக. ரசாயண சம்யோகத்தால் உண்டாகும் மாறுதல்களை உதஹரித்து எழுதுக.

III. ஸ்திதிஸ்தாபக குணம் உள்ள நான்கு பொருட்களைச் சொல்லி அவைகளை எவ்விதமாய் உபயோகித்தால் அவற்றின் ஸ்திதிஸ்தாபக குணம் உபயோகப்படுமென்று தெரியப்படுத்துக.

IV. பஞ்சு மூட்டைகளை அழுத்து யந்திரத்தின் முக்கிய பாகங்களை மாத்திரம் எடுத்துக்காட்டி அந்த யந்திரத்தை எவ்விதமாக உபயோகப் படுத்துகிறார்கள் என்றும் அதில் ஜலம் எப்படி உதவி செய்கிறதென்றும் விவரமாய் எழுதுக.

V. தங்கம், ரஸம், இவற்றின் தாரதர எடை எண்கள் எவ்விதம் கண்டு பிடிப்பீர்? ஒரு எண்ணெயின் தாரதர எடை எண் $\frac{3}{4}$ ஆனால், 156 கன ஸெண்டிமீடர் எண்ணெயின் எடை என்ன?

VI. புகைக் கூண்டுகள் ஏன் ஆகாயத்தில் ஏறி பறக்கின்றன? ஜலத்தில் மிதத்தலுக்கும் இதற்கும் உள்ள சம்மந்தத்தைக் காட்டுக.

VII. வாயுவாங்கி எவ்விதமாயிருக்கும்? ஒரு பாத்திரத்தில் உள்ள வாயுவை வெளிப்படுத்துவது எப்படி?

VIII. சாதாரணத் தராசின் அங்கங்கள் யாவை? நல்ல தராசில் இவ் வங்கங்கள எப்படியிருக்கவேணும்? தப்பிதமான தராசு கொடுத்தால் அதைக்கொண்டு சரியான எடை எப்படி கண்டுபிடிக்கலாம்?

IX. நெம்பு கோல்கள், கம்பிகள், சாரங்கள் இவற்றால் உபயோகமென்ன? ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்களை எழுதுக.

X. ஒரு பாத்திரத்தில ஜலத்தை அடுப்பின்மேல் வைத்தால் என்ன விதமான மாற்றங்கள் உண்டாகுமென்பதை விவரமாக எழுதுக.

XI. சீதோஷ்ணமானியை விவரித்தெழுதுக. நம் தேகத்தின் ஸாதாரண டெம்பரேச்சர் என்ன? சுத்தஜலம் கட்டிப்போகும் டெம்பரேச்சர் என்ன?

XII. பட்டணத்தில் சாயங்காலம் சமுத்திரக்காற் றடிப்பதேன்?

XIII. உஷ்ணம் பரவும் மூன்றுவிதங்களையும் விவரித்து உதாஹரணங்கள் எழுதுக.

XIV. முப்பட்டைக் கண்ணாடியின் வழியாகப் பார்த்தால் வஸ்துக்கள் இடம் மாறியும் நிறங்கள் கூடியும் காணப்படுவதேன்?

XV. வஸ்துக்கள் வெண்மை மஞ்சள முதலிய வர்ணங்களுள்ளவையாக காணப்படுவதேன்?

XVI. இடி விழுந்த விடத்தின் தூரத்தை சுமாராக கணக்கிடுவதெப்படி?

XVII. ஊசியை காந்தமாக்க என்ன செய்வீர்கள்? தேநிரும் புக்கும் எஃகுக்கும் இவ்விஷயத்தில் உள்ள பேதமென்ன?

XVIII. நீங்கள் கண்ட பாட்டரியை விவரித்தெழுதுக. ட்ராம் வண்டி விளக்குக்களில் வெளிச்சம் எப்படி உண்டாகிறது?

CHEMISTRY.

I. வாயுமண்டலத்தில் நீராவியிருப்பதாக எப்படி நிரூபிக்கலாம்?

II. பிராணிவர்க்கமும், விருக்ஷவர்க்கமும் வாயுமண்டலத்தில் ஒன்றுக்கொன்று செய்யும் உதவியென்ன?

III. சுண்ணாம்புக்கலலில் கரியமிலவாயுவிருப்பதாக எப்படிக்காட்டுவீர்? கரியமிலவாயுவின் குணஙகளென்ன?

IV. சிம்னிவிளக்கின் மூன்று பாகங்களுக்கும் உபயோகங்களென்ன? மண்ணெண்ணை விளக்குக்கு சிம்னிவைத்தால் ஏன் புகையில்லாமல் இருக்கிறது?

V. காற்றடித்தால் ஏன் பெரிய தீக்கள் விருத்தியாகின்றன? விளக்கு அணைந்துபோகிறது?

VI. பிராணவாயுவின் பலவிதமான உபயோகங்களை உதாஹரணங்களோடு எழுதுக.

VII. செம்பு, எஃகு, ஈயம் இவற்றின் குணங்களும் உபயோகங்களும் எழுதுக.

VIII. லோஹ மிச்ரங்கள் என்றால் என்ன? மூன்று உதாஹரணங்களை எழுதி அவற்றில் கூடிய லோஹங்களும், மிச்ரங்களின் குணங்களும் எழுதுக.

IX. உப்புக்கள் எப்படி உண்டாகும். செம்பை கந்தகதிராவகத்தில் கரைத்தால் என்ன ஆகும்?

X. படிக்காரம், வெண்காரம் இவற்றின் குணங்களும் உபயோகங்களும் எழுதுக.

XI. கந்தகம் எவ்விடத்தில் கிடைக்கும்? என்ன விதமாய் உபயோகப் படுத்துவார்கள்? கந்தகப் புகையின் குணங்களென்ன?

XII. கண்ணாடி, சோப்பு, இவைகளை எப்படி செய்வார்கள்? சாதாரணத் தீக்குச்சிக்கும் சேவ்டி (Safety) தீக்குச்சிக்கும் உள்ள பேதமென்ன?